
வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
ஆறு பகைவர்கள்
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவர் காட்டும் ஆறு பகைவர்கள்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே


1. அறுகுணங்கள் தரும் ஆணவம்
2. அறுகுண சீரமைப்பில் அமைதி
3. காமாதி ராஷசப் பேய்
4. பஞ்ச மகா பாவங்கள்
5. சோம்பலை சாம்பலாக்குவோம்
6. பொறாமையைப் பொசுக்குவோம்


# 1.அறுகுணங்கள் தரும் ஆணவம்

காட்டில் ஒரு பெருமை வாய்ந்த தேக்கு மரம் இருந்தது. அது உயரமாகவும் வலிமையாகவும் இருந்தது. மரத்தின் அருகில் ஒரு சிறிய மூலிகை இருந்தது



தேக்கு மரம், "நான் மிகவும் அழகானவன், வலிமையானவன். என்னை யாரும் தோற்கடிக்க முடியாது.

இதைக் கேட்ட மூலிகை, "அன்புள்ள நண்பரே, அதிக பெருமை தீங்கு விளைவிக்கும். வலிமையானவர்கள் கூட ஒரு நாள் விழுவார்கள்.

தேக்கு மூலிகையின் வார்த்தைகளை புறக்கணித்தது.

அது தொடர்ந்து தன்னைப் புகழ்ந்து கொண்டது. பலத்த காற்று வீசியது. தேக்கு உறுதியாக நின்றது. மழை பெய்தபோதும், தேக்கு அதன் இலைகளை விரித்து வலுவாக நின்றது.

இந்த காலங்களில், மூலிகை தாழ்ந்தது. தேக்கு மூலிகையை கேலி செய்தது.

ஒரு நாள், காட்டில் ஒரு புயல் ஏற்பட்டது. மூலிகை தாழ்ந்தது. வழக்கம் போல, தேக்கு வணங்க விரும்பவில்லை.

புயல் வலுவடைந்து கொண்டே இருந்தது. தேக்கால் புயலின் தாக்குதலை தாங்க முடியவில்லை.

அது தனது வலிமையை இழந்தது . அது நிமிர்ந்து நிற்க முயன்றது ஆனால் இறுதியில் அது கீழே விழுந்தது. அதுவே பெருமைமிக்க மரத்தின் முடிவு.

எல்லாம் மீண்டும் அமைதியாக இருந்தபோது, மூலிகை நேராக நின்றது. மூலிகை சுற்றிலும் திரும்பி பார்த்தது பெருமை வாய்ந்த தேக்கு விழுந்திருப்பதைக் கண்டது.

"மோகம், மதம், குரோதம், லோபம், மாச்சரியம் முதலியன அடிமை ஓலை எழுதி, என்னை அந்த ஆணவத்தால் தேக்குமரம் போல் மனம் அடிமை கொள்கிறதே" என்று வருந்துகிறார் தாயுமானவர் இந்தப்பாடலில்

பாகமோ பெறஉனைப் பாடஅறியேன் மல
பரிபாகம் வரவும் மனதில்
பண்புமோ சற்றும் இலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப

தேகமோ திடம் இல்லை ஞானமோ கனவிலும்
சிந்தியேன். பேரின்பமோ

சேரஎன்றால் கள்ள மனமோ மெத்தவும்
சிந்திக்குது என் செய்குவேன்?

மோகமோ, மதமோ, குரோதமோ, லோபமோ,
முற்றுமாற் சரியமோதான்
முறியிட்டு எனைக்கொள்ளும் நிதியமோ தேடஎனில்
மூசுவரி வண்டுபோல

மாகம் ஓடவும் வல்லன் எனையாள வல்லையோ?
வளம் மருவு தேவைஅரசே!
வரைராஜனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காதலிப் பெண்உமையே. (ஞாக.பா.583)

- வளம் மிகுந்த தேவை நகருக்கு அரசியே!
- இமயமலை அரசனுக்குக் கண்மணி போல் வந்து உதித்தவளும், மலையில் வளர்ந்தவளும், பெற்றோருக்கு விருப்பம் மிகுமாறு வளர்ந்த பெண்ணும் ஆகிய பார்வதி தேவியே!
- நயமுடன் உன்னைப் புகழ்ந்து பாட எனக்குத் தெரியாது.
- மலபரிபகாம் வருவதற்கு ஏற்ற பண்பு ஒரு சிறிதும் என் மனதில் இல்லை.
- ஒழுக்க நெறிகளைக் கடைபிடிக்கும் இயமம் முதலிய யோக நெறியில் நிற்கலாம் எனின், பாவியாகிய என்னுடைய பாவவடிவ உடம்புக்கு வலிமை இல்லை.
- ஞானநெறி பற்றி கனவில்கூட சிந்தித்துப் பார்க்கவில்லை.
- பேரின்பம் பெறலாம் என்றால் கள்ள மனம் மிகுதியும் தடுக்க நினைக்கிறது.
- இதற்கு நான் என்ன செய்வேன்?
- மோகம், மதம், குரோதம், லோபம், மாச்சரியம் முதலியன அடிமை ஓலை எழுதி, என்னை அந்த ஆணவத்தால் அடிமை கொள்கிறது.

- செல்வத்தைத் தேடலாம் எனிலோ மலர்களைத் தேடிச் சென்று மொய்க்கும் அழகிய வண்டுகள் போல ஆகாயத்திலும் திரிய வல்லவனாய் இருக்கிறேன். இப்படிப்பட்ட என்னை நீ, உனது வல்லமை கொண்டு ஆட்கொள்வாயோ?

தாயுமானவர் வேதனைப்படும் அறுகுணங்களத் தரும் ஆணவத்தை களைய என்ன செய்ய வேண்டும்?

வேதாத்திரியம் வழி காட்டுகிறது

அறுகுணச் சீரமைப்பு வேண்டும் என்று சொல்கிறது வேதாத்திரியம்

அறுகுணம் என்பது காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்ற பெயர்களில் வட நூலார் குறிப்பிட்டுள்ள ஆறுவகை மனோ நிலைகள்.

இவை தமிழ் மொழியில் முறையே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என விளக்கப்படுகின்றன.

இவை எல்லா உயிர்களிடத்தும் அமைந்துள்ளன. மனிதனிடம் இந்த மனோ நிலைகள் எழுச்சி பெறும் போது தீய செயல்களைச் செய்து விடுவான். அதனால் பொருள் அழிவும், மகிழ்ச்சி இழப்பும் விளையும்.

தெளிந்த அறிவோடும், விழிப்போடும் இருந்தால் இந்த ஆறு மனோ நிலைகளில்

- பேராசையை நிறை மனமாகவும்;
- சினத்தைப் பொறுமை யுடமையாகவும்;
- கடும் பற்றை ஈகையாகவும்;
- முறையற்ற பால் வேட்பைக் கற்பாகவும்;
- உயர்வு தாழ்வு மனப்பான்மையைநேர் நிறையுணர்வாகவும்;
- வஞ்சத்தை மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளலாம்.

தனக்கும் பிறர்க்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவிற்கும், உடல் உணர்ச்சிக்கும் வருத்தம் எழாத அளவிலும், முறையிலும் செயலாற்றி இன்பமாக வாழலாம்.

தேவையும், பழக்கமும் சூழ்நிலைகளும் உணர்ச்சிகளைத் தூண்டி விடுகின்றன.

அனுபவ நினைவுகளும், சிந்தனையும், தெளிவும் அளிக் கின்ற நல்ல முடிவைக் கொண்டு உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் திறனே ""அறிவு'' எனப்படும்.

உணர்ச்சிகளால் அறிவு மயங்கித் தனது நிலை மறந்து செயலாற்றினால் அதனை ""மயக்கம்'' அல்லது ""மாயை'' என்று கூறுகிறோம். அறிவு நிலை குலைந்த மயக்கத்தில் தான் தீய செயல்கள் விளைகின்றன என்பது வேதாத்திரியம்

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்தில் ஆனந்தமே!!!
வாழ்க வளமுடன்

## 2.அறுகுண சீரமைப்பில் அமைதி

காம, குரோதம் முதலிய சத்ருக்களை எப்பொது நாசம் செய்ய முடியும் என்று கேட்டதற்குப் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்னதாவது.



"இவ்வித ஆசாபாசங்கள் உலகத்தையும் உலக விஷயங்களையும் பற்றியனவாக இருக்கிற வரையில் சத்ருக்களாகத்தான் இருக்கும்.

அவைகள் ஈசுவர விஷயமாக மாறினால் மனிதனுக்கு நற்றுணைகளாகும்.

ஏனெனில் அவைகள் அவனை ஈசுவரனிடம் அழைத்துச் செல்கின்றன.

உலக விஷயங்களிலுள்ள ஆசையைக் கடவுளிடத்து ஆசையாக மாற்ற வேண்டும்.

மக்களிடத்து உண்டாகும் கோபத்தை, கடவுள் தரிசனம் கிட்டவில்லையே என்று அவரிடம் காட்ட வேண்டும்.

இம்மாதிரி எல்லா ஆசாபாசங்களையும் மாற்றுக. அவைகளை அழிக்க முடியாது. ஆனால் நல்வழியில் திருப்பமுடியும். – ஸ்ரீராமகிருஷ்ணர்.

பொறாமை, நான் என்னும் தன்முனைப்பு, கொடை இல்லாமை. அருள் இல்லாமை, ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள் அழிக்க முடியாது. அதனால் நல்வழியில் திருப்பமுடியும்.

"அவ்விய ம் இருக்க, நான் என்கின்ற ஆணவம்
அடைந்திட்டு இருக்க. லோபம்,
அருள் இன்மை கூடக் கலந்து உள் இருக்க, மேல்
ஆசா பிசாச முதலாம்

வெவ்விய குணம்பல இருக்க, என் அறிவூடு
மெய்யன்நீ வீற்றிருக்க

விதியில்லை என்னிலோ பூரணன் எனும்பெயர்
விரிக்கில் உரை வேறும் உளதோ?

கவ்வுமலம் ஆகின்ற நாக பா சத்தினால்
கட்டுண்ட உயிர்கள் மூர்ச்சை
கடிது அகல வலியவரும் ஞானசஞ் சீவியே!
கதிஆன பூமிநடுவுள்

செவ்விதின் வளர்ந்து ஓங்கு திவ்யகுண மேருவே!
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே." (தா.பா.28)

- பற்றி நிற்கும் மும்மலமாகிய நாகபாசம் என்னும் ஓர் ஆயுதத்தால் கட்டுண்டு கிடக்கும் உயிர்களது மயக்கத்தை விரைந்து போக்க வலிய முன்வரும் பேரறிவு என்னும் பெருவாழ்வே!
- உச்சந்தலைக்கு மேலே சகசிரதளத்தில் நன்றாக உயர்ந்து வளர்ந்து நிற்கும் தெய்வீகமான நற்குண மலையே!
- பொறாமை இருக்க, நான் என்னும் தன்முனைப்பு இருக்க, கொடை இல்லாமையும் அருள் இல்லாமையும் ஆகிய இவை ஒன்றாய்க் கலந்து என் உள் இருக்க,
- வெளியே ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள் பல இருக்க.
- என் அறிவினுள்ளே மெய்ப்பொருளாகிய நீ எழுந்தருளி இருக்க வாய்ப்பு இல்லை.
- எனவே முழுமையானவன் என்னும் தேவரீரது திருப்பெயரை விரித்துப் பொருள் உரைக்கில், அதற்கு வேற பொருளும் உளதோ?

பொறாமை. நான் என்னும் தன்முனைப்பு, கொடை இல்லாமை. அருள் இல்லாமை, ஆசை ஆகிய பிசாசு முதலிய தீயகுணங்கள்

களைய என்ன செய்ய வேண்டும். அறுகுண சீரமைப்பு செய்தால் அமைதியான நற்குணங்கள் அமையும் என்கிறது வேதாத்திரியம்.

பேராசை, கவலைசினம், அழுக்காறு விட்டால்
 பேரறிவாய் விரிவடையும் மனது. தரம்மாறி
ஓராசை உளத்திலெழ, ஒத்தநுட் பத்தோடு
 உடலுறவு, சமுதாயம், இயற்கை நான்கின் இனிமை
சீராகக் காத்து ஆற்றும் சிறப்பு இயல்பாகும்.
 சிந்தனையின் உயர்வினிலே விழிப்புடனே வாழ,
யாரசையும் இதனால் அறிவறிய ஓங்கும்.
 எப்போதும் அமைதிஇன்பம், நிறைவுபெற்று வாழ்வோம்"
(ஞாக.பா.1603)

நிலையில் அறிவாக, அமைதியாக இருக்கும் உண்மை பொருளே அலையில் மனமாகவும் உள்ளது.

அறிவின் தரமே மனதின் திறமாக வெளிப்படுகிறது. மன அலைச்சுழல் வேகம் குறைந்தால், விரியும் தன்மை கூடுதல் ஆகும்.

பேரறிவாக தன்னையே உணரும்படியாக விரிவடையக்கூடிய தரம் உடைய மனமானது, பேராசை, கவலை, சினம், பொறாமை ஆகியவற்றால் தன்மை மாறிவிடுகிறது.

ஏதேனும் ஒரு ஆசையானது மனதில் ஏற்படும்போது மன ஓர்மை, உடல் கொள்ளும் உறவின் விளைவு, சமுதாய நலன், இயற்கையின் இணக்கம் ஆகிய நான்கின் இனிமையை சீராகக் காத்துக் கொள்ளும்படியாகச் செயல்படுவதுதான் சிறப்புடையதாகும்.

இத்தகு நிலையை இயல்பாக்கிக் கொண்டால், சிந்தனையின் உயர்வினால் விளைவறிந்த விழிப்பு நிலையில் வாழமுடியும்.

இதனால் யாருடைய ஆசையும் அறிவை அறியும் நோக்கில் உயர்வடையும்.

எப்போதும் வாழ்வில் அமைதி, இன்பம், நிறைவு பெற்று வாழ, உணர்ச்சி நிலையாகிய அறுகுணங்களை சீரமைத்து வாழ்வோம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்தில் ஆனந்தமே!!!
வாழ்க வளமுடன்




# 3. காமாதி ராஷசப் பேய்

அறியாமை ஆகிய மிகுந்த இருளாம் கரியநிறப் பேய்களாகிய காமம் முதலியவற்றுக்கு என்னைப் பலியாகத் தந்தது ஏனோ? என்று புலம்பகிறா் தாயுமானவர்.

கன்னம் கரியநிறக் காமாதி ராஷசப் பேய்க்கு
என்னைஇலக் காகவைத்தது என்னே பராபரமே.(பராபர.266.)

மூன்று ஆசைகளில் பெண்ணாசை! அன்று முதல் இன்று வரை ஆன்மீக உலகம் பேசும் வார்த்தை.

சடாமுடி திரித்த சன்னயாசிகளும் சறுக்கி விழுந்த இடம். விஸ்வாமித்திரா் வீழ்ச்சி பெற்ற இடம்! போலிச் சாமியார்கள் போர்வைக்குள் ஒளிந்திருந்த இடம்!

ஆனால் "உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு" என்று வாழ்ந்த வள்ளல்கள் வரலாறும் உண்டு.

ஸ்ரீராமகிருஷ்ணர் இளமையில் முரட்டுத்தன பக்தி கொண்டு இருந்தார்.

அதைத் தாங்கிக் கொள்ள முடியாத கோயில் நிர்வாகிகள் அவருக்கு புலன் இன்பதை ஊட்டினால் மாற்றம் பெறுவார் என்று கருதினார்கள.

திருமணம் செய் த வைத்தால் பைத்தியம தெளியும் என்று சில பெற்றோர்கள் நினைப்பதைப் போல் – அவர் தனித்து இருக்கும் வேளையில் சில விலைமாதர்களை அனுப்பி வைத்தார்கள்.

அவரோ காளியின் காட்சி வேண்டும் என்று பலவாறாக கதறிக் கொண்டுடிருக்கிறார்.

இந்த மாதர்களைப் பார்த்தவுடன் அளவற்ற ஆனந்தம் கொண்டு "தாயே உன் காட்சியை காண வேண்டும் என்று தவித்துக் கொண்டு இருந்தேன்.

நீ இத்தனை வடிவங்களில் காட்சி கொடுத்து விடட்டாயே- காளி" என்று பலவாறாகப் பரவச பபட்டு அவர்கள் பாதங்களை வணங்கி– அதீத நிலையில் சமாதி அடைந்து மயங்கி விழுந்தார்.

## விவேகானந்தரின் புலனடக்கம்.

உயர்ந்த நிலையில் தன் மனைவியையும்- காளி மாதாவாகப் பாவித்து பெண்ணிச்சையில் வெற்றி கண்டு உலகுக்கு காட்டிய மகான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தர் பணமின்றி வாழ்ந்து கொண்டிருந்தார்.

அச்சூழ்நிலையில் பணக்கார விதவை விவேகானந்தரை நோக்கி ”உன் வறுமையை அகற்றுகிறேன்- நீ என்னை ஏற்றுக் கொள்” என்ற படையெடுத்தாள்.

ஆனால் ஞானத்துறவி அதனை புறந்தள்ள புலனடக்கம் காத்தார்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோவில் உரையாற்றினார். 17 நாட்கள் நடந்த சர்வ சமய மகாநாட்டில் அவர் பலமுறை பேசினார்.

கேட்ட அத்தனைப் பேரும் அவரிடம் நெஞ்சம் பறிகொடுத்தனர். அதில் ஒரு பணக்காரப் பேரழகி அவரைச் சந்தித்து ” நான் உங்களைக் கணவனாக அடைய விரும்புகிறேன்” என்றாள்.

”அம்மா! துறவியான நான் எப்படி உனக்குக் கணவனாக இருக்க முடியும்? எத்தனையோ பேரை விட்டுவிட்டு- என்னை நீ ஏன் கணவனாக அடைய ஆசைப்படுகிறாய்?“ என்றார் விவேகானந்தர்.

”உங்களைப் போல் அறிவில் சிறந்த மகனைப் பெற வேண்டும்” என்றாள் அவள்.

”என்னைக் கணவனாகப் பெற்றுப் பிள்ளையைப் பெற நீங்கள் காத்திருக்க் வேண்டும். ஆனால் நீங்கள் நினைதால்- இப்போதே என்னைப் போன்ற மகனையல்ல- என்னையே நீங்கள் மகனாக ஏற்றுக் கொள்ள முடியும்-தாயே” என்றார் விவேகானந்தர்.

பெண்களைத் தாயாகப் பார்க்க வேண்டும் என்று தர்மம் கற்றுத் தந்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். அதை வலிறுத்தியவர் விவேகானந்தர். ஒவ்வொரு இளைஞுனும் இதை மனதில் கொள்ள வேண்டும்.

சரி....இந்த பால் வேற்றுமை உணர்ச்சியை எப்படி கட்டுப்படுத்துவது?

விடையாக வருகிறார் வேதாத்திரி மகரஷி..

1956 ஆண்டு சென்னையில் ஓர் அன்பர். அவர் ஆங்கில மருத்துவர். வேதாத்திரி மகரிஷியை நன்கு அறிந்தவர்.

பெண் பால் எண்ணத்தால் துன்புறுகிறார். தன் மனைவியை மட்டும் அல்ல. எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவர் மனதில் கட்டுப்படுத்த முடியாத இச்சை.

ஆனாலும் அவரது உள்ளம் இதிலிருந்து விடுபட வேண்டும் என இடைவிடாது முயற்சி செய்கிறது.

மூளை செல்களை ஒரு இச்சையில் பழக்கி மேலும் மேலும் அதில் மேற்பதிவு கொடுத்துக் கொண்டே வந்தால் மனிதனுக்கு அந்த இச்சை கட்டடப்படுத்த முடியாததாகிவிடும். உடற்செல்களை செயலாக்கத்தில் ஈடுபடுத்திவிடும்.

அவ்வாறே பழகிக் கொண்டிருந்த அந்த அன்பரும் ம க ரசி யிடம் ஆலோச னை கேட்கிறார்.

"அய்யா இந்த சிக்கலில் இருந்து விடுபட தாங்கள் தான் உதவி புரிய வேண்டும். நானும் பலவாறாக முயன்று பார்த்து தோல்வி அடைந்து விட்டேன் வழி கூறுங்கள்" என்கிறார்.

அறிவுவழியே சென்று பழகியவர்களுக்கு பாவனை வராது. பெண்ணைத் தாயாக பாவி என்று சொன்னால் காரண அறிவு- அது என் தாய் அல்ல என்று சொல்லும்.

அதனால் அதில் தோற்று விடுவார்கள். அவர் ஒரு மருத்துவர் என்பதால் அறிவுக்கு ஏற்றவாறு ஒரு வைத்தியம் செய்கிறார் மகரிஷி.

"நான் சொல்வதை நீங்கள் உள்ளார்த்தமாக செய்ய வெண்டும். ஒரு அழகான பெண்ணை மனதில் நினைத்துக் கொள்ளுங்கள்" என்கிறார்.

இது என்னடா சங்கடம். அவருக்குத்தான் ஏற்கனவே மனதில் நிறையபேர் இருக்கிறார்களே? ஒரு கணமும் அகல மாட்டேன் என்று சொல்லி!

”நினைத்துக் கொண்டேன் சாமி” என்கிறார். அந்தப் பெண்ணிற்கு இப்போழுது உயிர் இல்லை. தற்பொழுது அந்த பெண் எப்படி இருக்கிறாள்?”

”பிணமாக” கூறும்போதே அவர் ஈர்ப்பு குறைகிறது..

இப்பொழுது உடலில் இருக்கின்ற தோல், சதை- இரத்தம் எல்லாம் நீக்கி விட்டுப் பாருங்கள். என்ன தெரிகிறது. வெறும் எலும்புக்கூடு தான் இருக்கிறது!.

இந்த எலும்புக் கூட்டின் மீது உங்களுக்கு இச்சை இருக்கிறதா அல்லது இந்த தசைகள் இரத்தத்தின் மீது உங்களுக்கு இச்சை இருக்கிறா?

”எந்த இச்சையும இல்லை. ஒவ்வாமையே தோன்றுகிறது” என்கிறார்.

உருவத் தோற்றத்தை எடுத்து பழகிய உங்கள் மனத்தில் தான் இச்சை இருக்கிறது.

அந்தப் பதிவை நீங்கள் ஆழமாக்கிக் கொண்டுள்ளீர்கள்.

இனிமேல் நீங்கள் எந்தப் பெண்ணை பார்த்தாலும் தீய எண்ணம் வரும் பொழுது உங்களுடைய அகக் கண்களால் அவர்களுடைய எலும்புக் கூட்டை மட்டும் கவனித்துப் பார்த்து பழகி வாருங்கள்.

அதையே ஆழ்மனதில் பதிவு செய்யுங்கள். பெண்களிடம் நெருங்கிப் பழகுவதையும்- தேவையற்று பேசுவதையும் தவிர்த்து விடுங்கள்.

கருமையத்தில் வந்து மேலும் பழக்கமாக்கி கொண்டதை விடாது பயிற்சியாலும்- முயற்சியாலும் தான் போக்க முடியும்.

பெண்பால் ஏற்படும் காம இச்சை நாளடைவில் மாறிவிடும் என்கிறார்.

இந்தப் பயிற்சியை மேற்கொண்ட அவருக்கு அந்த எண்ணத்தில் இருந்து சிறிது சிறிதாக விடுவித்து பிறகு வெற்றி கொண்டதாக தெரிவித்தார்.

மனித மனம் பேரறிவின் பின்ன மாக இருக்கிறது. அது தன்னையோ- முழுமையையோ உணராத போது-- பலவாறான முகங்களைப் பார்த்து ரசித்து-- தன்னில் பதிய வைத்துக் கொள்கிறது. தன்னுடைய சொத்தாக்கி வித்தாக்கி வருங்கால சந்ததியினருக்கு வாரி வழங்குகிறது.

"வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே
எனை மறந்தேன் எந்தன் வினை மறந்தேன் இறைவா
உனை மறந்தேன் ஆனால் நீ உள்ளுணர் எனை மீட்டு" (3)

முயற்சியும் பயிற்சியும் செய்து பால் வேற்றுமையை மனதில் இருந்து வேரறுப்போம்.

வாருங்கள் மனவளக்கலை மன்றத்திற்கு. காயகல்பம் பயில்வோம். பால் உறவில் அளவுமுறை பயில்வோம். வாழ்வில் வளமும் அமைதியும் பேரின்பமும் அடைவோம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்தில் ஆனந்தமே!!!
வாழ்க வளமுடன்




# 4. பஞ்ச மகா பாவங்கள்

கொலை, களவு, காமம், கோபம், பொய் முதலிய குற்றங்களை விட்டு. நல்லெழுக்கத்தில் நின்றால் அல்லவோ, மலை இலக்குபோல் பெரிய குறிக்கோளாய் விளங்கும், நுமது திருவருள் விளங்கித் தோன்றும்" என்கிறார் தாயுமானவர்.

கொலைகளவு கள்காமம் கோபம்விட்டால் அன்றோ
மலைஇலக்கா நின்னஅருள்நான் வாய்க்கும் பராபரமே.( பராபர.288)

## பஞ்ச மகா பாவங்கள் – வள்ளலார்

கள், காமம், கொலை, களவு, பொய் இவ்வைந்தும் கொடிய துக்கத்தை உண்டு பண்ணும்.

இவ்வைந்திலும் கொலை விஷேஷ பாவம். எனினும், கள்ளுண்டவனுக்குக் காமம் உண்டாகாமலிருக்காது, கொலை செய்யத்துணிவு வராமலிருக்காது, களவு செய்யாமலிரான், பொய் பேச அஞ்சான். ஆகையால், இந்த ஐந்தையும் ஒழிக்க வேண்டியது அவசியம். இதில் ஒன்றை அடைந்த எவனாலும் அவனை மற்றவை தொடராம லிரா. --திருவருட்பிரகாச வள்ளலார்.

“கள்” என்பது நமது பழந்தமிழர்கள் போதைக்காக பயன்படுத்திய தாவர நீர். பனை மரம், தென்னை மரம், அத்தி மரம், அரச மரம், ஈச்ச மரம், வேம்பு, சப்பாத்தி என பலவற்றில் இருந்தும் கள் எடுத்து தமிழர்கள் பயன்படுத்தினர்.

வேதாந்திகள் “சுரா” என்னும் போதை பானத்தை அருந்தினர்.

அன்றைய தமிழர்களும் வேதாந்திகளும் ஆண் பெண் பேதமின்றி போதை பானங்களை அருந்தி வந்துள்ளனர்.

தமிழ் வளர்த்த ஔவையார் கள் பருகக்கூடியவர். கள் குறைவாக இருந்தால் அதியமான் அதை தனக்கு கொடுத்துவிடுவான் என்றும், அதிக அளவு கள் இருந்தால், தான் கவிதைப்பாட அதியமான் கள் குடித்துக்கொண்டே அதை ரசிப்பான் என்றும் சங்ககால அரசர்களில் ஒருவனான அதியமானின் புகழை கூறியுள்ளார் ஔவையார்.

சங்ககால மன்னன் ஒருவன் கள் விற்கும் பெண்டிற்கு கடன் வைத்த சம்பவங்கள் எல்லாம் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இதனிடையே புத்த மதம் இந்தியாவின் வடக்கே வளர்ந்த போது கள்ளுண்ணாமையும், புலால் உண்ணாமையும் மக்களிடையே போதிக்கப்பட்டது. திருவள்ளுவரால் இந்த இரண்டு போதனைகளும் மக்களிடையே எடுத்துச் செல்லப்பட்டன.

நவீன இந்தியாவில் காந்தியடிகளும் கள்ளுண்ணாமையும், புலால் உண்ணாமையும் குறித்து மக்களிடையே பிரச்சாரம் செய்தார்.

கள் என்னும் போதையானது மனாதிகள் என்று சொல்லக்கூடிய மனம், அகங்காரம், புத்தி, சித்தம் ஆகியவைகளை செயலிழக்கச் செய்யும்.

தற்போது “கள்” என்ற இடத்தில் டாஸ்மாக் மது வகைகள், சாராயம், அயல் நாட்டு மது வகைகள் எல்லாம் அடக்கம் என்பதை மறக்கலாகாது.

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். (திருக்குறள்-926)

செயலொன்றும் செய்ய முடியாத செத்த பிணத்தை ஒத்தவர் கண்மூடி தூங்குபவர். அதுபோல் நம் செயல்களை முடக்கக்கூடிய விஷத்தினை அருந்தியவரை ஒத்தவர் மது அருந்தியவர் ஆவர்.

“காமம்” என்பதும் மது போன்றதொரு ஒரு போதையே. காமம் என்பது முறையற்ற ஆண்/பெண் இன்பத்தைக் குறிக்கும்.

முறையான காமம் சமுதாயத்தால் அங்கீகரிக்கப்பட்டு திருமணத்தால் வழிநடத்திச் செல்லப்படுகின்றது.

ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடு முறையான காமத்தில் உண்டு. ஆனால் நமது சங்ககால தமிழர்கள் பலர் முறையற்ற காமத்தால் மகிழ்ந்தோ அல்லது இழிந்தோ இருந்தனர்.

இன்றைக்கும் நாம் கோயிலுக்கு சென்றால், அங்குள்ள கோயில் கோபுரத்தை பார்த்து வணங்குகின்றோம்.

அந்த கோபுரத்தை இன்னும் சற்று உற்று பார்த்தால் அங்கே முறையற்ற காமலீலைகளின் சிலைகள் செதுக்கப்பட்டிருக்கும்.

நான் கடந்த மாதம் மன்னார்குடி கோயிலுக்கு சென்றேன். அங்குள்ள கோயில் கோபுரத்தை புகைப்படம் எடுக்கும்போது எனது பார்வையில் பட்டது முறையற்ற காமலீலை சிலைகள்.

ஒரு ஆண் சுய இன்பத்தில் ஈடுபட்டிருப்பது போலவும், மற்றோர் இடத்தில் ஒரு ஆண் பல பெண்களிடம் காமத்தில் ஈடுபட்டிருப்பது போலவும் சிலைகள் அக்கோபுரத்தில் கண்டு எனக்குள் அதிர்ந்தேன்.

இவை எல்லாம் அன்றைய நமது தமிழர்களின் கலாச்சாரங்களாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பெண் அடிமைகள் விற்கப்பட்டனர். தேவதாசி முறைகள் கோயிலில் தாண்டவமாடின.

இப்படிப்பட்ட காமங்கள் சமுதாயத்தை இழிவான நிலைக்கு எடுத்துச்செல்லும் மற்றும் தனிநபரின் ஒழுக்கக்கேடான செயலாக இவைகள் பிற்காலத்தில் பார்க்கப்பட்டன.

புத்த சமண மதங்கள் இவைகளை கண்டித்தன. தென்னாட்டில் திருவள்ளுவரும் முறையற்ற காமத்தை எதிர்த்தார். முறையான காமத்தை பாடினார்.

மலரினும் மெல்லியது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார். (திருக்குறள்-1289)

காம உணர்வு மலரைவிட மென்மையானது. உலகியலில் ஒரு சிலரே அந்த மென்மையுணர்வை உணர்ந்து செயல்படுபவர். மற்றவர்கள் எல்லோரும் மின்சாரம் பாய்ந்த இயந்திரமாய் செயல்பட்டு சீரழிவர்.

ஒருத்திக்கு ஒருவன் என்றாகிலும் அவர்களுக்குள் மென்மை இருக்க வேண்டும்.

இல்லை எனில் அதுவும் முறையற்ற காமம் என்றாகிவிடுகின்றது. முறையற்ற காமமும் மது போதைபோன்ற பெரும் பாவச்செயலாகும்.

“கொலை” என்பது உயிர் வாழ்தலுக்கான சுதந்திரத்தை ஒருவரிடமிருந்து ஒருவர் துன்பப்படுத்தி பறிப்பதாகும்.

இதற்கான காரணங்களில் தலையாயதாக இருப்பது இரண்டுதான். ஒன்று மது போதை மற்றது ஆண்/பெண் போதை.

இதனினும் மாறுபட்ட இரண்டு தலையாய காரணங்களும் உண்டு.

ஒன்று உணவிற்காக பிற உயிர்களை கொலை செய்வது மற்றது கடவுளின் பெயரால் உயிர்களை பலி கொடுப்பது. மற்ற எவ்வகை பாவங்களை காட்டிலும் கொலை செயல் புரிவது பெரும் பாவமாகும்.

கொலையும் புலையும் ஒன்றுதானா? என்றால், இல்லை. இரண்டும் வெவ்வேறு. புலை நுகர்பவர் கொலை செய்யாமலும் இருக்கலாம். கொலை செய்பவர் புலை நுகராமலும் இருக்கலாம்.

இதனை அறிந்துதான் “புலை கொலைத் தவிர்த்தோர் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்” என்ற கட்டளையை வள்ளலார் தாம் உருவாக்கிய ஞானசபை வாயிலில் பொறித்தார்.

திருவள்ளுவரும் கொல்லாமை, புலால் மறுத்தல் என்னும் இருவேறு தலைப்புகளில் பாடல் இயற்றியுள்ளதை காணலாம்.

பஞ்ச மகா பாவத்தில் கொலை மட்டுமே உண்டு. புலை விடுபட்டுள்ளது. அதனால் புலால் உண்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று நினைத்துவிட வேண்டாம்.

சுத்த சன்மார்க்கத்தை பொறுத்த மட்டில் முதலில் புலை தடுக்கப்பட வேண்டும். அதன் பிறகுதான் கொலை தடுக்கப்பட வேண்டும். எனினும் கொலை தடுக்கப்பட்டுவிட்டால் அதன் வழி வருகின்ற புலையும் காணாமல் போய்விடும் என்பது இயல்பு.

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்னூக்காது ஒன்றன்

உடல்சுவை உண்டார் மனம். (திருக்குறள்-253)

ஆயுதம் ஏந்திய ஒருவனது மனது இரக்கத்தை எண்ணாதது போல, புலால் உண்பவனின் மனமும் இரக்கத்தை எண்ணாது அரக்க குணத்தையே ஒத்திருக்கும்.

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி. (திருக்குறள்-324)

எவ்வுயிரையும் கொலை செய்யாமல் இருப்பதுவே நல்வழியாகும். எனவே கொலை செய்யும் பெரும் பாவத்தை செய்யாமலிருக்க வேண்டும்.

“களவு” என்பது பிறருடைய பொருளை அவருக்குத் தெரியாமல் கவர்வது. பிறர் பொருள் மேல் இச்சை கொள்வது பாவம்.

அவ்வாறு இச்சைகொண்டு அதனை திருடிவிடுவது மகா பாவங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

களவும் சூதும் ஏறத்தாழ ஒன்றுதான். சூது என்பது பிறர் பொருளை தந்திரத்தால் கவர்ந்துவிடுவது.

“களவும் கவறு மற” என்ற பழமொழியானது ‘களவும் கற்று மற’ என்று தவறாக திரிந்துவிட்டது.

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார். (திருக்குறள்-935)

கவறு என்றால் சூதாடும் கருவி. தாயக்கட்டைகளை கவறு எனலாம். கழகம் என்பது சூதாடும் இடம். சூதாடும் கருவியையும், ஆடும் இடங்களையும், கைத்திறமைகளையும், மதித்து கைவிடாதவர் எல்லாப் பொருள் உடையவராக இருந்தாலும் இல்லாதவர் ஆகிவிடுவார்.

எனவே ஒருவர் பொருளை திருடுவதும், கவறு என்கின்ற சூதாட்டக் கருவிகளாலே தந்திரமாய் பறித்தலும் பெரும் பாவமாகும்.

“பொய் எனப்படுவது நடக்காத ஒன்றை நடந்ததாக அறிவித்தல் ஆகும். ‘பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காது’ என்பது பழமொழி.

பொய் சொன்னால்தான் போஜனம் கிடைக்கின்றது என்பது இன்றைய வாழ்வியல் மொழியாகிவிட்டது என்பது வெட்கக்கேடானது. பொய் சொல்லாதவர்கள் உலகில் யாரேனும் உளரோ? என்றால், இல்லை. பொய்யும் பேசலாம் என்கின்றார் வள்ளுவர்.

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின். (திருக்குறள்-292)

குற்றமற்ற நன்மை ஏற்படுமானால் பொய் சொல்வதும் வாய்மையே ஆகும் என்கின்றார்.

இந்த தன்மையில் நாம் பொய் சொல்வது தவறில்லை. ஆனால் பிறரின் வாழ்வை கெடுக்கும் நோக்கில், நம் வாழ்வை காப்பாற்றிக்கொள்ளும் நோக்கில் பொய் சொல்லுதல் பெரும் பாவமாகும்.

உண்மைக்காக தன்னுயிரை விட்டவன் அரிச்சந்திரன் மட்டுமே. அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்து, நானும் இனிமேல் பொய் பேசுவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டவர் நமது தேசப்பிதா காந்தியடிகள் ஆவார்.

பொய் மொழிதல் என்பது எவ்வளவு பாதிப்புகளை வலிகளை கொடுக்கும் என்பதை அதனால் பாதிக்கப்படும் மக்கள் நன்கு அறிவர்.

நமது வழக்காடு மன்றங்களில் ஒரு பக்கம் மெய்யும் மறு பக்கம் பொய்யும் பேசப்படுகின்றது.

இதற்கு நடுவில் மெய்யோ அல்லது பொய்யோ தீர்ப்பாக அளிக்கப்படுகின்றது.

மெய்யே ஆனாலும் அதற்கு சாட்சிகள் வேண்டும். சாட்சிகள் இல்லாத மெய், பொய் என்று ஆகிவிடுகின்ற நீதி முறைகளை என்னென்பது? தீர விசாரிப்பது என்பது சாட்சிகளுக்கும் அப்பாற்பட்டது என்பதை நீதிமன்றங்கள் உணரவேண்டும்.

கள், காமம், கொலை, களவு, பொய் என்கின்ற ஐந்து பெரும் பாவச்செயல்களில் யாரேனும் ஒன்றினை செய்தாலே மற்றதும் அவனை பற்றிவிடும்.

எனவே இவை ஐந்து பெரும் பாவங்களை நாமெல்லாம் நம்மிடமிருந்து ஒழிப்பது அவசியம் என்கின்றார் வள்ளலார்.

இன்றைய சமுதாயத்தையும், இன்றைய மக்களையும், இன்றைய அரசியலையும் நினைக்கும்போது வள்ளலார் கூறுகின்ற போதனை செவிடன் காதில் ஊதிய சங்காக உள்ளதை அறிகின்றோம்.

நன்மார்க்கர்கள் ஆளும்போதுதான் சமுதாயம் சீர்படும். அதற்கு மக்கள் எல்லோரும் சன்மார்க்கத்திற்கு வரவேண்டும். சன்மார்க்கம் தழைத்தால் நன்மார்க்கம் உண்டாம்.

## ***கம்ப ராமாயணத்தில் பஞ்ச மா பாதகம்- 5 பாவங்கள்***

ஐந்து தீய செயல்களை இந்துக்கள் பெரிய பாவச் செயல்களாகக் கருதுகின்றனர். அவை

கள், களவு, கொலை, பொய், காமம் (பிறர் மனைவியை விரும்பும் காமம்).

**ஓதநீர் மண் இவை முதல் ஓதிய**
**பூதம் ஓர் ஐந்தினில் பொருந்திற்று அஞ்சியே**
**வேத நூல் வரன் முறை விதிக்கும் ஐம்பெரும்**
**பாதகம் திரண்டு உயிர்ப் படைத்த பண்பினான்**
(ஆரண்ய காண்டம், கவந்தன் படலம், கம்ப ராமாயணம்)

கவந்தன் என்னும் அசுரன் பஞ்ச பூதங்களால் மட்டும் ஆனவன் அன்று; பஞ்ச மா பாதகங்கள் ஒன்று சேர்த்து ஒரு உருவம் செய்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தானாம்.

அந்தக் கவந்தன், குளிர்ச்சி பொருந்திய நீரும் பூமியும் ஆகிய இவை முதலாகக் கூறப்பட்ட பஞ்ச பூதங்களினால் இவன் உடல் ஆக்கப்பட்டது அல்லாமல், வேத நூல்கள் முறைப்படி உரைக்கும் கள், களவு, பிறர் மனை விரும்புவதாகிய காமம், பொய், கொலை ஆகிய பஞ்ச மா பாதகங்கள் ஒன்றாகச் சேர்த்து உயிர்பெற்று வந்தவன் என்னும் தன்மை உடையவன்.

## பகவத் கீதை

பகவத் கீதையில் (1-36) அர்ஜுனன், போர் புரிய மறுத்து அதற்குப் பல காரணங்களைக் கூறுகிறான். அதில் ஒன்று கொடும் பாவிகளான, திருதராஷ்டரன் பிள்ளைகளான கௌரவர்களைக் கொன்றால் மிகவும் பாபம் வருமே என்கிறான். கொடும் பாவிகள் என்பதற்கு அர்ஜுனன் பயன்படுத்தும் சொல், 'ஆததாயின:' என்பதாகும்.

யார் ஆததாயினர்கள் என்பதை ஒரு சம்ஸ்கிருத ஸ்லோகம் அழகாக விவரிக்கிறது. அதில் பஞ்ச மஹா பாதகங்களோடு, 'தீ வைத்தல்' என்ற மற்றொரு பாபமும் சேர்க்கப்படுகிறது:–

**அக்னிதோ கரதச்சைவ சஸ்த்ரபாணிர்த் தனாபஹ:**

**க்ஷேத்ர தார ஹரச்சைவ ஷடேதே ஹ்யாததாயின:**

தீவைப்பவன், விஷம் வைப்பவன் (கொலை), ஆயுதம் கொண்டு ஆயுதமில்லாதவரைக் கொல்பவன், பிறர் பொருளை அபகரிப்பவன், பிறர் நிலத்தை அபகரிப்பவன், பிறர் மனைவியை அபகரிப்பவன் – இந்த ஆறு பேரும் ஆததாயிகள் (கொடும் பாவிகள்) எனப்படுவர்.

ஆக வேத காலம் முதல் இந்தப் பாவப் பட்டியல் இருப்பதால்தான் "வேத நூல் வரன் முறை விதிக்கும் ஐம்பெரும் பாதகம்" என்று

கம்பன் சொல்கிறான். வேத நூல்களைக் கரைத்துக்குடித்தவன் கம்பன்!

சிறுபஞ்ச மூலத்தில், காரியாசான் கொஞ்சம் மாறுதலான பாவப் பட்டியல் தருகிறார்:

**பொய்யாமை பொன் பெறினும் கள்ளாமை மெல்லியலார்**
**வையாமை வார்குழலார் நச்சினும்– நையாமை**
**ஓர்த்துடம்பு பேருமென்று ஊன்வாய் உண்ணானேல்**
**பேர்த்துடம்பு கோடல் அரிது**



ஒருவர்க்கு தங்கக் கட்டிகள் கிடைக்கும் என்றாலும் பொய் சொல்லாதிருத்தல், திருடாமல் இருத்தல், தன்னைவிட வலிமை குறைந்தவரை திட்டாமை, பெண்களே மேலே வந்து விழுந்தாலும் அவர்களை விரும்பாமை, உடல் மெலிகிறதே என்று எண்ணி ஆடு, மாடு, கோழிகளைக் கொன்று உண்ணாமை – இந்த ஐந்தையும் பின்பற்றுவோருக்கு மறு பிறவி இல்லை; முக்தி கிட்டும்.

## தம்மபதம்

இதையே புத்தமதத்தினரின் வேத நூலான தம்மபதத்திலும் புத்தர் கூறுவார்:-

யார் ஒருவன் மற்ற உயிரைப் பறிக்கிறானோ (கொலை), யார் ஒருவன் தனக்குக் கொடுக்கப்படாததை எடுத்துக் கொள்கிறானோ



(களவு), யார் ஒருவன் பிறர் மனைவியை அனுபவிக்கிறானோ (காமம்), யார் ஒருவன் பொய் சொல்கிறானோ, யார் ஒருவன் மதுபானம் அருந்துகிறானோ அவன் தனக்குத்தானே வேர் செல்லும் ஆழத்துக்குக் குழி பறித்துக் கொள்கிறான். (தம்மபதம் -246, 247)

ஆன்றோர் சொல்லை மனதில் கல்லெழுத்தாகப் பதித்து, அவர் சொற்படி நடப்போம்.

## வேதாத்திரிய மெய்விளக்கம்

பதிந்த ஒவ்வொரு பதிவுக்கும் அது செயல்பட காலம் உண்டு.

இயற்கையிலே எந்தத் தவறும் இருக்கமுடியாது. ஏற்கனவே ஒருவர் ஒரு தவறு செய்ய எண்ணியிருப்பார். அதைச் செயலிலே கொண்டுவர முடியவில்லை. அது அப்படியே பதிவாகி இருக்கிறது.

காலத்தால் எண்ணிய எண்ணம் எப்படியும் செயல்பட வேண்டும்.

அவ்வாறு அவர் ஒருவருக்குத் தீங்கு செய்ய வேண்டும் என்று எண்ணிவிட்டால், அந்த எண்ணத்தை உணர்ந்து அழிக்கவில்லையென்றால் அதற்குரிய காலத்திலே அந்தத் தீமை செய்தே ஆகவேண்டும்.

ஆகவே அவரது எண்ணம் செயலாக வேண்டும். அதே சமயம் இங்கே நம்மிடத்தே செயல் பதிவு நீங்கவும் வேண்டும்.

இரண்டையும் இணைத்து இயற்கை ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அவர் மூலமாக நமக்கு ஒரு வருத்தத்தைத் தந்தது.

இதை உணரும்போது நாம் அவரை வாழ்த்தவே வேண்டும். நாம் மகிழ்ச்சியடையவும் வேண்டும். ஏனென்றால் நம்மிடம் உள்ள பதிவு

ஒன்று வெளியாகிவிட்டது, அது செயலாகி அப்பதிவு கழிந்துவிட்டது என்று.

ஒரு மனிதனிடத்திலே நூற்றுக்கணக்கான பதிவுகள் இருக்கலாம்.

ஒரு விதையிலே மரம் இருப்பதுபோன்று, அந்த விதையை நட்டவுடனேயே - பூ, காய், பழம் எல்லாம் உடனே வந்துவிடுவது இல்லை.

விதையானது முதலிலே சிறு செடியாக வருகிறது. காலத்தாலே, பல வாரங்கள் கழித்தோ, மாதங்கள் கழித்தோ, ஆண்டுகள் கழித்தோ மரமாகிய பின் பூ, காய், பழம் வரலாம்.

அதுபோன்று பதிந்த ஒவ்வொரு பதிவுக்கும் செயலாக மலர அதற்கு தகுந்த காலம் என்று ஒன்று உண்டு.

அந்த அந்தக் காலத்தால் முறையாக அது எழுச்சி அடைந்து இயங்கிச் செயல்படும்.

“இடுக்கண் வருங்கால் நகுக" என்றுதான் திருவள்ளுவர் கூறினாரே தவிர, அந்தத் துன்பத்தை ஏற்படுத்தியவரை வருத்த வேண்டும் என்று கூறவில்லை.*

*எனவே எவ்வாறு நாம் துன்பம் வரும்போது நகை புரிய வேண்டும்? சிரிக்கவேண்டும்? என்றால்.. உண்மையிலேயே ஏற்கனவே இருந்த நம்முடைய சுமை அல்லது பாவப் பதிவு (□□□□ □□□ □□□□□□□□□) ஒன்று இன்று நம்மிடம் அப்பதிவு செயலாகி கழிந்துவிட்டது என்று எண்ணும்போது,

அத் துன்பத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய இன்பமான உணர்ச்சிதான் அகத்தவப் பயிற்சியினால் பக்குவப்பட்ட குண்டலினியோக சாதகனுக்கு ஏற்படவேண்டுமே அன்றி.. சினம் கொள்ளக் கூடாது!

சினத்திற்குப் பதிலாக அத்தகைய ஞானம் கொண்ட கர்மயோக நெறி தான் அகத்தவப் பயிற்சி (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) மேற்கொள்ளும் குண்டலினியோகிக்கு மலர வேண்டும்.

*வினைப் பயன்*

வினைக்குஒரு விளைவுண்டு., உடல் உள்ளத்தின்
    விரைவு ஆற்றலுக்கு அதுஒத்தால் இன்பம்.
முனைத்துஅது பருஉடற்கோ மூளைக்கோ ஓர்
    முரண்பட்ட விளைவானால் துன்பம் ஆகும்.
தனக்கும்அது பிறருக்கும், உடல் மூளைக்குத்
    தவறாக அணு அடுக்கைச் சீர்குலைத்து
மனக்களங்கம் உடலில் நோய்ப் பதிவாய்க் கொள்ளும்.
    மதித்து வினை விளைவுகளைக் கணித்து, வாழ்வீர். (ஞா.பா.1289)

## அன்பின் அழைப்பு

பஞ்சமகா பாதகங்கள் செய்தோ ரேனும்
    பகுத்தறிவால் விளைவறிந்து எண்ணி எண்ணி,
சஞ்சலத்தில் ஆழ்ந்துள்ளம் உருக்கத் தோடு,
    சன்மார்க்க நிலைகாணத் துடித்து நின்றால்,
அஞ்சாதீர்! அன்புடனே உமையும் ஏற்போம்!
    அறிவுநிலை அறிவிப்போம்! அமைதி காண்பீர்!
துஞ்சாமலும் கூட நாடு வோர்க்குத்
    துணைபுரிதல் எம்கடமை ஆகக் கொண்டோம்.(ஞா.பா.1386)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்தில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.




# 5. சோம்பலை சாம்பலாக்குவோம்

மருதாபுரியில் மூன்று சகோதரர்கள் வாழ்ந்து வந்தார்கள். அதில் மூத்தவரின் பெயர் தன்யன், இரண்டாவது சோசு, கடைசியில் பிறந்தவர் பென்கன். தன்யன் நல்லவர். கடின உழைப்பாளி.

மற்ற இருவரும் சோம்பேறிகள். அவர்கள் எந்த வேலையும் செய்யாமல் எப்பொழுதும் உறங்கிக் கொண்டும், விளையாடிக்கொண்டும் பொழுதைப் போக்கினார்கள்.

ஒரு நாள் தன்யன் தன் தம்பிகளிடம், “பிரியமுள்ள தம்பிகளே, நாம் இப்படிக் கஷ்டப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பது சரியில்லை. நம் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். அதனால் நான் ஒரு பயணம் செல்லப் போகிறேன். நல்வாய்ப்பு கிடைத்தால் உழைத்து, சம்பாதித்துக் கொண்டு வருவேன்” என்றார். ஆனால் அது தம்பிகளுக்குப் பிடிக்கவில்லை.

“ஏன் நீங்கள் மட்டும் செல்வந்தனாக வேண்டும்? நாங்களும் பணம் சம்பாதிக்க வேண்டாமா? அதனால் நாங்களும் பயணம் போகிறோம்” என்று சொன்னார்கள். தன்யன் பதில் எதுவும் சொல்லவில்லை.

